சிலம்பு உள | திருவள்ளுவர் ஆண்டு ஈஈஅஈ, புரட்டாசி அக்டோபர், 1952 | பரல் உ

திருக்குறள் சொல் அடைவு

தொல்காப்பியம்

இன்று காணப்பெறும் சங்க மருவிய நூற்கள் எட்டுத் தொகை பத்துப் பாட்டு பதினெண்கீழ்க் கணக்குகள் என்ப. இவற்றிற்குக் கருவியாகிய தொல்காப்பியமும், இறையனர் களவியலும் சங்கம் மருவிய நூற்களே.

இவற்றுள் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம் காலப் பழைமை வாய்ந்தது. குறைவிலா நிறைவாம் முழுமுதற் செழுந் தமிழ்நூல். அந் நூல் இலக்கணமே அன்றிச் செந்தமிழ் நாட்டுப் பண்டைய வாழ்க்கையினைப் படம்பிடித்துக் காட்டும் வரலாற்று நூலும் ஆகும். வரலாற்றுசிரியன் உலகியல்பில் உள்ளதை உள்ளவாறு உரைப்பதே ஒண்மையாகும். அதனால் ஆண்டு உரைத்தனவெல்லாம் அப்படியே மேற்கொண்டு ஒழுகத் தக்கன என்பது கருத்தன்று. தூசுபோக்கி மாசுநீக்கி மாண் பொருள் கொள்ளுவதே மதிவல்லார் கடன். அதுபோல் தொல்காப்பியத்தின் கண்ணும் விழுமிய வாழ்க்கையாம் உடலுயிர் ஒத்து ஒருவன் ஒருத்தியாய் மருவி மும்மையினும் முழுத் துணையாய் வாழும் வாழ்க்கைக்கு அரண் செய்வன அனைத்தும் கொள்ளத்தக்கனவே. முரண்படுவன சிற்சில ஆங்காங்குக் காணப்படின் அவை தள்ளத் தக்கனவேயாம். இந் நூலின் காலம் ஆறுயிரம் யாண்டுகளுக்கு முன் என்ப.

திருக்குறள்

இது தெய்வச் செந்தமிழ்ப் பொதுமறை. அனைத்துல கோர்க்கும் உய்வினைத் தரும் நினைத்தற்கரிய நெடுமறை.

இறைவன்போன்று இறைவன் திருவருள் கை வரப்பெற்ற மெய்யுணர்ந்தார்—நாயன்மார் நவிலும் நல்லுரைகள், உயிர்தொறும் கலந்து மறைந்து நின்று அவ்வுயிர்களை நன்னெறிக்கண் ஒழுகப் பண்ணுதலால் நல்லார் அனைவராலும் மறை என வழங்கி வரலாயின.

இத் தெய்வமறை கடவுள்போன்று காலம் இடம் கோலம் மொழி முதலியவற்றிற்கு அப்பாற்பட்டது. இது செந்நெறிக் கண் "அப்பாலும் அடிச் சார்ந்தார்" என்னும் மெய் அடியார் தன்மையை ஒத்துத் திகழ்வது. அச் சிறப்பினைச் சேக்கிழார் அடிகள் கூறியருளும் திரு மொழியால் உணர்க. அவ் அருள் மொழி :

"மூவேந்தர் தமிழ்வழங்கும் **நாட்டுக் கப்பால்**
முதல்வனுர் அடிச்சார்ந்த மூறைமை போரும்
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும்
நற்றிறண்டர் **காலத்து முன்னும் பின்னும்**
பூவேய்ந்த நெடுஞ்சடைமேல் அடம்பு தும்பை
புதியமதி நதியிதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியான் அடிச்சார்ந் தாரும்
செப்பியஅப் பாலும்அடிச் சார்ந்தார் தாமே."

—கூ, திருத்தொண்டர்சீர், அப்பா. க.

எக்காலத்தும் எந் நாட்டகத்தும் எம்மொழிவல்ல எத் திறத்தார்க்கும், ஒத்து உறுதுணையாவது. அஃது உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய உணவுப் பொருள்களில் சிறந்த நீரையும் உப்பையும்போன்று திகழ்வது. நனிநாகரிகப் பண்பு வாய்க்க விழையும் பிழையிலா மாந்தர் அனைவரும் ஐயப்பாடின்றிக் கைக்கொண்டொழுக வேண்டிய அனைத்தையும் அறுதியிட்டுக் கூறுவது. அம்மட்டோ? தள்ள வேண்டுவ அனைத்தும் தாழ்வின்றிக் கூறுவது. அதனால் திருக்குறள் நடக்க வேண்டுவ கூறும் நயநூல் என்க.

தொல்காப் பியமிருந்த சொல்லும் திருக்குறள்
நல்லகொண் டுய்யநாட் டும்.

வைப்பு

திருக்குறள் அறம் முப்பத்தெட்டு, பொருள் எழுபது, இன்பம் இருபத்தைந்து எனத் தொல்லாசிரியர் கைக்கொண்டு ஒழுகிய பாகுபாடு ஆகும். திருவள்ளுவப் பெருந்தகையார் தாம் வகுக்கும் இயல்களைத் தொடங்குங்கால் அவ்வப் பெயராலேயே கூறியருள்வர். எடுத்துக்காட்டாக. இல்லற இயல், அரசியல், அமைச்சியல், அரண் இயல், கூழ் இயல், படை இயல், நட்பு இயல், குடி இயல் என்பன.

இவ் இயல்களைத் தொடங்குங்கால் அவ்வப் பெயராலேயே கையாண்டிருப்பதை உற்று நோக்குக. நு. இல்லற இயல்—இல் வாழ்க்கை. நூ. அரசியல்—இறைமாட்சி. சூ. அமைச்சியல் —அமைச்சு. எ. அரணியல்—நாடு. எசு. கூழியல்—பொருள். எள. படை இயல்—படைமாட்சி. எஃ. நட்பியல்—நட்பு. கூசு. குடி இயல்—குடிமை. இங்ஙனம் வருவன சான்றும்.

இதுபோல் துறவியலும், நூறு. துறவு இயல்—துறவு என் றிருப்பதே அமைவுடைத்து, அதற்கு மாறுக உறு. துற்வு இயல் —அருளுடைமை என்றிருப்பது எங்ஙனம் பொருந்தும்? பொருந்தும் என்பார் கருதுவது,

> "பாயிரம் நான்கில் லறமிருபான் பன்மூன்றே
> தூய துறவறமொன் றூழாக—ஆய
> அறத்துப்பால் நால்வகையா ஆய்ந்துரைத்தார் நூலின்
> திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து."
>
> —திருவள்ளுவமாலை, எறிச்சலூர். உறு.

இப் பாட்டுத் தப்பாகக் கருதியார்மனம்போல் திருத்தப் பட்டிருக்குமென என்ண இடந்தருகின்றது; எங்ஙனமெனின்?

> "பாயிரம் நான்கில் லறமுப்பான் பன்மூன்றே
> தூய துறவறமொன் றூழாக.—

என்று இருந்திருக்கவேண்டும். அப்படியிருப்பின் 'பன்மூன்றே' என்பதற்குப் பொருள் பன்னப்பட்ட மூன்று என்று கொள்ளு தல் வேண்டும். அப்படிக் கொள்ளின் நூறு. துறவு. நூசு. மெய் யுணர்தல். நூஎ. அவாவறுத்தல் என்னும் மூன்றுமே துற வறம் ஆகும். இம்மூன்றும் முப்பொருள் உண்மை கூறுவதும் ஆகும். ஒருபுடையாய் உயிர், இறை, தளை எனக் கொள்ளுதல் ஆகும்.

சிறப்பு

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இத் தெய்வ மறை தனக்கு முன்னுள்ள நூல்களின் மலிவு தீர்க்கும் மாண் விளக்காய்த் தனக்குப் பின்னுள்ள நூற்கள் அனைத்திற்கும் சொல்லும் கருத்தும் தொடரும் வரையாது வழங்கும் வண் மைத் தாயகமாய், மேல்வரும் நூல்கட்கும் வைப்பு ஊற்றாய் உலகிற் சிறந்த பிறமொழியாளர் உள்ளங் கொள்ளைகொள் வள்ள அமிழ்தாய், சொற்சுருக்கமாய் பொருள்விளக்கமாய், ஓதற்கெளிதாய் உணர்தற்கரிதாய் விளங்கும் ஒண்மையது.

இதன் சிறப்பு நோக்கிக் கலை மலிந்த ஆங்கிலம் முதலிய தொண்ணூறுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்த்துப்

பொன்னேபோற் போற்றிக் கற்று ஒழுகி நற்றவ வள்ளுவரை நம் தெய்வம் எம் தெய்வம் என்று நாவார வாழ்த்தி மனமார நினைந்து நாளும் கொண்டாடுகின்றனர். இதனால் தனித்தமிழ்ப் பண்பு காடும் மலையும் கடலும் சூழ்ந்த நாடுகளிலும் ஊர்களிலும் பேரூர்களிலும் வாழும் பெருமக்கள் எளிதாகப்பெற்றுப் பீடும் பொருளும் பெருக்கி வீடும் விழைந்து விழுமிய நனிநாகரிகராக வாழத் துணை செய்கின்றது.

இப்பெருமை நோக்கியே நாட்டுப்புலவர் நயனர் மைந்தர் ஒப்பில் சுப்பிரமணிய பாரதியார் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து—வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என வீறு கொண்டு வாயார வாழ்த்திக் கூறுவாராயினர்.

இத்துணைச் சிறந்த மூவுலகும் ஈடாக விலைவரம்பில்லா முழுமாணிக்கங்கள் நிறைந்த வயிரமணிப் பேழை திருக்குறள். அம்மாணிக்க மணிகள் பென்னம்பெரிய பொருள்களைச் சின்னஞ் சிறுசொற்களால் உன்ன உன்ன வற்று ஊற்றுப் உவப்பூட்டி உணர்த்தும் சீர்கள். அச்சீர்கள் மேல் வரியில் நான்கும் கீழ்வரியில் மூன்றுமாக ஏழு சீர்கள் உள்ளன. இவ் ஏழும் வழுவிலா எழுவகை ஆற்றல்களைக் குறிப்பன. நாற்சீரும் மூச்சீருமாக அமைந்து நடக்கும் அருமை நாற்பொருளை முப்பாலில் நன்கமைத்து நாட்டிய நயம் காட்டும். இவ் அருமை வயிரமணிப் பேழையைத் திறந்து உள்ளவாறு இன்புறச் செய்யும் திறவுகோல் ஒன்று இன்றி உலகவர் மருண்டு இருண்ட அறையில் எழில் விளக்கின்றிப்புக்கு விழியிருந்தும் குருடராய்ப் பொருள் விளங்காது தெருள் பெறுது மயங்குவாரை ஒத்து மயங்கினர்.

திறவு

அம்மயக்கந்தீரச் சி. யு. போப்பையரவர்கள் ஆங்கிலத்தில் தாம் மொழிபெயர்த்துள்ள திருக்குறளுக்கு ஆங்கிலத்திலேயே "திருக்குறட் சொல்லிருப்பிசையும் (Concordance) பேரகராதியும் (Lexicon) யாத்துள்ளார்கள்.

1924-இல் சென்னை திரு. வா. மார்க்கசகாயஞ் செட்டியார் அவர்கள் "திருக்குறள் சொற்குறிப்பு அகராதி" என ஒருநூல் யாத்துள்ளார்கள். முன்னது மொழிவேறு. பின்னது முற்றும் நிரம்பாதது. அது கைப்பிடியில்லாத் திறவுகோல் ஒத்தது.

இஞ்ஞான்று ஆசிரியர், சாமி. வேலாயுதம் பிள்ளை அவர்கள் தமிழுக்கு அளித்துள்ள அமிழ்தினும் இனிய "திருக்குறள் சொல்லடைவு" என்னும் நூல் முற்றும் நிரம்பிய வேலைப்பாட

மைந்த சிறந்த திறவுகோல் ஆகும். அவர்கள் செந்தமிழ் அன்பிலும் சிவத்தொண்டிலும் ஈடுபட்டுப் பல்லாண்டுகள் மெய்யாகத் தோய்ந்த விழுத்தவம் இச் சொல்லடைவு நூலாக உருவெடுத்துள்ளது. இனித் திருக்குறள் கற்பார் எவ்வித மலைவுமின்றி உள்ளவாறு கற்க உறுதுணையாகும் இந்நூல். உலகுக்கு ஆசிரியரவர்கள் இந்நூலை யளித்துப் பெருநன்றி செய்துள்ளார்கள். நாம் அவர்களை என்றென்றும் பாராட்டு வோமாக. அந்நூலை நின்று நிலவச் செய்யத் துணை புரிவோமாக.

வரலாறும் வளர்ப்பும்

எஞ்சா வளஞ்சேர் தஞ்சைமா நகர்க்கண் ஆசிரியர் 22—8—1895-இல் பிறந்தனர். இவர்தம் தந்தையார் வே. சாமி நாத பிள்ளை அவர்கள் ஆவர். இவர் திருப்பெயர் வேலாயுதம் பிள்ளை என்ப. இளமையிலேயே தவமிகு தந்தையாரால் திருக் குறளே போன்று உலகப் பொது நெறியாய்ச் செந்தமிழ்ச் செந்நெறியாய் விளங்கும் சைவத்தின்கண்ணும் அதற்கு உடல் போன்று திகழும் தமிழின் கண்ணும் பெரிதும் ஈடுபாடுடைய ராய் வளருமாறு பேணி வளர்க்கப்பெற்றார்.

படிப்பு

இளமையிலேயே தந்தை தாயரை இழந்தனர். தந்தை தாயரை இழக்க நேரினும் அவர்தம் தவப்பேற்றால் அருள் உளத்தால் தளரா முயற்சி களைகணைக் கல்வி பயின்று இளங் கலைஞர் என்னும் பி.ஏ. பட்டம் பெற்றனர்.

வேலை

உடனடியாக ஆசிரியர் வேலையில் அமர்ந்தனர். விரைவில் கற்பிக்கும் உரிமையாம் எல்.டி. பட்டம் பெற்றனர். தஞ்சைமா வட்ட நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளிகளில் பதினே ராண்டு உதவி ஆசிரியராகவும், இருபத்தோராண்டு தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்து நற்பெயருடன் 1950-இல் ஊதியத் தர் என்னும் ஓய்வு பெற்றனர்.

தமிழ்த்தொண்டு

தலைமை ஆசிரியர் நிலை எய்தியதுமுதல் பள்ளிகளைத் தண் தமிழ் மயம் ஆக்கினர். ஆசிரியர் கட்டளை (Staff order) முதல் எல்லா நடவடிக்கைகளையும் பெரும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது தண் தமிழிலேயே நிகழ்த்தி வந்தனர். தஞ்சைமா வட்டப் பந்தயங்களையும் திருவாரூர் உயர் நிலைப் பள்ளியில் இருந்துகொண்டு கூடியவரை தனித்தமிழில் நடத் திப் பெருமை பெற்றார்.

1925 முதல் தமிழ்ப் பொழிலில் முவர்நமிழ் என்னும் ஆய்வுக் கட்டுரைகளையும் உடலியலும் உடல்நலவழியும் (Physiology and Hygienes) என்னும் அறிவியல் நூலையும் பல்வேறு மதிப்புரை கட்டுரைகளையும் வெளியிட்டு வந்துள்ளார்.

1937 முதல் மூன்றாண்டு உழைத்துத் தமிழ்க்கலைச் சொல் லாக்கத்திற்கு அடிப்படை கோலினர். மொழியரசி என்னும் அரிய தமிழ்ப் பெருமை கூறும் நூலை இயற்றித் திருவாரூரில் 24—10—47-இல் மிகச் சிறப்பாக அரங்கேற்றினர்.

28—9—'52-இல் பல்லாண்டுகள் அரும்பாடுபட்டுப் பெரும்பொருள் செலவில் தாமே இயற்றிய 'திருக்குறள் சொல்ல டைவு' என்னும் அரிய பெரிய கருவிநூலை அச்சிட்டுச் சென்னை யம்பதியில் யாவரும் போற்றுமாறு அரங்கேற்றுவித்தனர்.

அரங்கேற்று விழா

28—9—'52-இல் சென்னை இராஜாஜி மண்டபத்தில் திருக் குறள் சொல் அடைவு அரங்கேற்று விழா மிகச் சிறப்பாக மாலை நான்கு மணிக்கு நிகழ்ந்தது. மக்கள் இருபாலார் ஆயிரக்கணக் கானவர் ஆர்வமுடன் குழுமி யிருந்தனர். விழாவிற்குப் பொருள் அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை பூண்டார்கள். அவர்கள் பொன் மொழியின் சுருக்கம்:

"தமிழ் மக்களாகிய நாம் பழம் பெருமையையும் வளத்தை யும் மீண்டும் பெற வேண்டுமானால், உலகம் போற்றும் திருக் குறளை ஆர்வமுடன் தொடர்ந்து பயிலவேண்டும்; திருக்குறள் சொல்லடைவு அப் பயிற்சிக்குப் பெருந்துணை புரியும்," என்று கூறினர். "திருக்குறளின்கண் மெய்யுணர்ந்தார் முதலிய மேலோர்க்கு மட்டும் அன்றி எல்லாப் பெருமக்கட்கும் நாடொறும் வாழும் வாழ்க்கைக்கு இன்றியமையாத எல்லாத் தேவைகளும் அமைந்துள்ளன. ஆசிரியர் பயன் கருதாது பல்லாண்டு உழைத்துத் திருக்குறள் சொல்லடைவு நூலை இயற்றியுள்ளனர். அந்நூலைப் பேணவேண்டும்; அவர்களை ஆத ரிக்க வேண்டும். நல்ல நூல்களை யாக்க நல்லாசிரியர்கட்கு நாம் ஆதரவு நல்கினால்தான் தமிழ் வளரும்," என்றனர்.

வரவேற்புக் குழுவுத் தலைவர் திரு. சச்சிதானந்தம் பிள்ளை யவர்கள் எல்லாரையும் நன்கு வரவேற்றுச் சொற் சுருங்கப் பொருள் விளங்கத் திட்பநுட்பச் செறிவுடன் இன்மொழி மொழிந்தனர். அரங்கேற்றுவிழாவைச் சிறப்பித்தும் வாழ்த்தி யும் பல்வேறிடங்களிலிருந்து தமிழன்பர்களும், புரவலர்களும்,

காவலர்களும் விடுத்துள்ள எழுத்துக்கள் படிக்கப்பட்டன. அவற்றுள் சிறந்தன; இராஜாஜி, டாக்டர், சி. பி. இராமசாமி ஐயர், திரு. பி. டி. இராசன், திரு. அவினாசிலிங்கம் செட்டியார் முதலியோருடையன ஆகும்.

அமைச்சர் வேறு இன்றியமையா அலுவல் காரணமாகச் செல்ல நேர்ந்தமையால் டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கினர்கள்.

தமிழ் முனிவர் திரு. வி. க. அவர்கள் பேரார்வ வாழ்த்து முழக்கிடையே வந்தமர்ந்தனர். அவர்கள் ஆசிரியரையும் ஆசிரியரின் அரும்பெரும் தொண்டினையும் பண்பினையும் பாராட்டிப் பேசினர். திருக்குறளுக்குப் பல்கலைக் கழகத்தில் தனி நிலையம் வேண்டும். மேனாடுகளில் செகப்பிரியர் நூலொன்றுக்கு நாம் கேட்குமாறு அதைப்பற்றிய விளக்கங்களே அமைந்த பல நூல்கள் சேர்ந்த நூல் நிலையங்களிருப்பதுபோன்று நம் நாட்டகத்தும் பல்வேறு இடங்களில் பல்வேறு நூல் நிலையங்கள் அமைய வேண்டும். திருக்குறளில் கூறப்பட்டுள்ள செடி கொடிகள், திருவுருவங்கள், கருவிகள், ஏனைப் பொருள்கள் முதலியன பெருமக்கள் உள்ளவாறு கண்டு உவப்புறுமாறு அமைக்க வேண்டும். அதுவே திருக்குறளுக்குச் செய்யும் பெருந் தொண்டு. திருக்குறளைப்பற்றிய பல்வேறு ஆய்வு நூல்கள் வெளிவர வேண்டும் என்றனர்.

பண்டைத் தமிழ்ப்பண்பு சிறிதும் குன்றாது ஒழுக்க வழக்கங்களுக்கு அரண்செய்வதாய், தனித்தமிழ் மாண்பு தலை சிறப்பதாய், மக்கள் கண்டுகளித்துக் கைக்கொண்டொழுகி உய்வதற்கு ஊன்றுகோலாய், அல்லன விலக்கி நல்லனவே புகல்வதாய், நாடும், மொழியும், நன்னெறியும் பீடுறுவதாய் உள்ள 'ஔவையார்' முதலிய சிறந்த நாடகங்களையே நடித்து நாட்டுக்கும் மொழிக்கும் நற்பணி புரிந்துவரும் திரு. டி. கே. எஸ். பிறப்பாளர் தொண்டு உலகுணர்ந்ததே.

அவர்கள் இவ்வரங்கேற்று விழாவைப் பண்டை முறைப்படி ஆட்சியாளர் நேர்நின்று சிறப்பாக நிகழ்த்தியிருக்க வேண்டும். அதற்குத் தமிழகம் மொழிமுறைப்படி பிரிந்து தனியாட்சி பெற்றுத் திகழவேண்டும். அப்பொழுதுதான் நாடும் மொழியும் நன்னெறியும் மேன்மையுற்று உலகு மதிக்க ஒண்மையுற்று ஓங்கும் என்றனர். பண்டைய மரபு விளங்க அரங்கேறு புலவர்க்குத் தம்மவாய்ப் பொன்னாடை போர்த்துப் பூமாலை சூட்டிப் புகழ்ந்தனர்.

அம்மட்டோ? ஆசிரியரை ஊக்குமுகத்தான் செல்வர்க்கும் புரவலர்க்கும் வழிகாட்டியாய் திருக்குறள் சொல்லடைவுப்படி ஐம்பதை ஆங்கே வாங்கி நீண்ட புகழெய்தினர். திரு. புலவர் புத்தனேரி-சுப்பிரமணியம் அவர்கள் ஆசிரியரைப் பாராட்டிப் பாடிய வெண்பாவையும் படித்தளித்தனர்.

இந்நூல் புரவலர் பி. டி. இராசன் எம். எல். ஏ. அவர்கட்கு அரும்புகழ் அலங்கலாக அணியப் பெற்றுள்ளது. நூலையும் ஆசிரியரையும் பாராட்டித் திரு. ஹெர்பர்ட் சுந்தரம், முகம்மது ஹுசேன் நைனர், தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி), ஆர். பி. சேதுப்பிள்ளை முதலியோர் பேசினர். எல்லாரும் இந்நூலை வாங்கி இன்னும் ஆசிரியரால் வெளிவர இருக்கும் பொருளடைவுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு புகன்றனர்.

ஆசிரியரவர்கள் நூல் யாக்கத் தொடங்கியது முதல் இன்று காறும் துணைபுரிந்த எல்லார்க்கும் நன்றி புகன்று உழைப்பையும் எடுத்துகூறி விழாக் கூட்டத்தைக் கண்டு தம் அகமகிழ்வையும் ஆர்வத்தையும் நவின்றனர். இந் நூலையாக்கப் பதினேழு ஆண்டுகள் ஓய்வு நேரங்கள் பிடித்தன என்றும், ஐஞ்ஞூற்று அறுபது அடிப்படைச் சொற்களே திருக்குறளில் அமைந்துள்ளன என்றும், அஃது இறும்பூது பயக்கும் அரும்பணி என்றும் கூறினர்.

திருவாட்டி எஸ். பார்வதி அம்மாள் திருக்குறள் செய்யுட்களைப் பண்ணோடு பாடி இன்னிசையோடு மிழற்றினர். திரு. பி. ஸ்ரீ. ஆச்சாரியார் நன்றிகூறப் பேரவை நன்கினிது நிறைவுற்றது.

வையப் பொதுமறையாம் வள்ளுவர்நூற் சொல்லடைவு
தெய்வத் தமிழ்சிவத்தொண் டார்சாமி—மெய்ப்புகழ்சேர்
வேலா யுதன்செய்தான் வேட்பஅரங் சேற்றினான்
நூலாற்பொன் னூற்புகழ்ந்தார் நோக்கு.

———

திருவெம்பாவை

[திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, நியாகராயர் கல்லூரி, மதுரை]

திருவெம்பாவை என்பது பழந்தமிழ் நூல்கள் காட்டும் பாவைப் பாட்டு வகையாகும்; அஃதாவது மகளிர் நீர்த் துறையில் பாவையமைத்து நீராடி விளையாடுவது பொருளாக வரும் பாட்டு. பாவையை வண்டற் பாவை யென்றும் இவ் விளையாட்டை வண்டலாட்டு என்றும் வழங்குவதுண்டு. "வண்டற் பாவை வெளவலின், நுண்பொடிகளை இக்கடல் தூர்ப்போல்" (ஐங். 124) என வருவது காண்க. இவ் விளையாட்டுத் திங்களில் ஒரு சிறந்த நீராட்டாகவும் சங்ககாலத்தே நிகழ்ந்திருக்கின்றது. இதைத் தைந்நீராடல் என்றும் அம்பாவாடல் என்றும் பரிபாடல் முதலிய நூல்கள் தெரிவிக்கின்றன. இந் நீராட்டை விரிந்த நூல்வல்ல சான்றோர் முன்னிருந்து தொடங்குவிக்கின்றனர். மணமாகா மகளிர் "வெம்பாதாக வியன்நில வரைப்பு," என, இந்த அம்பாவாடலை மேற்கொள்ளுகின்றனர். மகப்பெற்று முதிர்ந்த மகளிரான தாயர்களும் முனித்துறை முதல்வியர்களும் சிறுமகளிர்க்குத் துணையாக முன்னின்று இந் நீராட்டினை அமைத்துத் தருகின்றனர். இது பற்றியே இது, "தாயருகா நின்று தவத்தைந்நீ ராடுதல்" என்று குறிக்கப்படுகிறது. அழகிய பாவைகளைத் துறைக்கண் நிறுத்தி ஆடுதலாதலால் இது **அம்பா வாடல்** என்று பெயர் பெற்றது. அம்பாவையாடல் அம்பாவாடல் என மருவிற்றெனக் கொள்வது பொருத்தமாக இருக்கிறது.

பண்டை நாளில், முழுத் திங்கள் வழியே மாதங்கள் கணக்கிடப்பட்டன. அதனால் மாதத்தைத் திங்கள் என்று குறிப்பது தமிழ் வழக்கம். பழந்தமிழ் நூல்கள் எல்லாவற்றிலும் "மாதம்" என்ற சொல் காணப்படாது. அதன் பொருளே தோன்றத் "திங்கள்" என்ற சொல்லே காணப்படுகிறது. பண்டையோரும் இந்நாளையவரும் சித்திரைத்திங்கள், மார்கழித்திங்கள் என்று வழங்கியது இதுபற்றியேயாகும். பின்னர் இம் முறை மாறி ஞாயிற்றை வழியாகக் கொள்ளும் முறையாயிற்று.

நாம் இப்போது வழங்கும் மார்கழித் திங்கள், பண்டை நாளில் மார்கழி முழுமதியன்றோடு முடியும்; மறுநாள் தொடங்கிய தைத்திங்கள், தைம்மாதத்து முழுமதியோடு முடியும். பண்டையோர், மார்கழி முழுமதியன்று ஆதிரைநாள் வந்து